# தேவனுடைய சித்தத்தின்படி

அன்பு சகோதர சகோதரிகளுக்கு இனிய வாழ்த்துக்கள்:
இவ்வுலக வாழ்க்கையில், நாம் பாவங்களைப் போக்கி, புண்ணியத்தைச் சேர்த்து பூரணப்பட்டு (பரிசுத்தம்பெற்று), இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகு, கடவுளை அடையவே விரும்புகிறோம்.

இதற்காக ஏதாவது ஒரு வழியை….
நமது முன்னோர்கள் வழியாகவோ, (அல்லது)
நாமாகவோ, (அல்லது)
மற்ற மனிதர்களின் மூலமாகவோ,
பெற்றுக்கொண்டு அதன்மூலம் கடவுளை அடைய நாமாக முயற்சிக்கிறோம்.

இந்த உலகத்தில் பாவமில்லாதவர் என்று ஒருவரும் இல்லை.
ஒருவரும் பரிபூரண ஞானமும் உடையவர் இல்லை.
எனவே நம்முடைய ஞானத்தால் நாம் செய்கிற முயற்சி, நமக்கு பரிபூரணத்தைத் தராது.

மனிதர்களாலே பரிபூரணப்படுத்தக்கூடாத நிலையை மாற்ற, கடவுளே வழியை ஏற்படுத்தி, அதை தாமே இவ்வுலகத்தில் நமக்காக நிறைவேற்றினார். அவருடைய இணையில்லாத இந்த மகத்தான காரியத்தை நாம் ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றினால்,
நாம் தேடும் வாழ்க்கையின் பரிபூரணத்தை அவரே நமக்கு கொடுக்க பொறுமையுடன் காத்திருக்கிறார்
என்றென்றும் ஜீவிக்கிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள் 423)

ஆண்டவர் அருளிய வேதத்தின் ஒரு பகுதியை தயவுசெய்து நீங்கள் வாசித்து,
சிந்தித்து, தியானியுங்கள். நன்றி.:
இந்த உலகத்தில்,
எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்.
இப்படியிருக்க, நியாப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.
இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, தேவனுடைய சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.
ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.
சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
(வேதாகமம்: எபிரெயர் 10:11,1,10,14, கொலோசெயர் 1:19-20)

தொடர்ந்து வேதத்தை வாசித்து, சிந்தித்து, தியானியுங்கள்.
உங்கள்மேல் பிரியமுள்ள இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.